This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# சமூக அறிவியல்

## ஆறாம் வகுப்பு

## முழு வருட வழிகாட்டி

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

**சிறப்பம்சங்கள்**

- 2020 ஆம் ஆண்டுக்கான பருவம் – I, II & III-க்குரிய புதிய பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- அனைத்து பாடங்களுக்கும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

2021-22 பதிப்பு

© வெளியீட்டாளர்கள்

இரா.செல்வராஜ், எம்.ஏ.,
ISBN : 978-81-8449-708-3
குறியீட்டு எண் . : FY-6-SS (TM)

**பதிப்பாளர்**

**திரு.சுபாஷ் ராஜ், B.E., M.S.**

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040. ☎ 044-4862 9977, 044-486 27755
✆81242 01000/ 81243 01000
**e-mail :** orders@surabooks.com, **website :** www.surabooks.com

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

| | | |
|---|---|---|
| புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு | : | enquiry@surabooks.com |
| புத்தகங்கள் வாங்க | : | orders@surabooks.com |
| தொடர்புக்கு | : | 80562 94222 / 80562 15222 |
| வாட்ஸ்அப் | : | 8124201000 / 9840926027 |
| **ஆன்லைன் வலைதளம்** | : | www.surabooks.com |

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Our Guides for Std. VII & VIII**

**TERMWISE GUIDES (for each Term)**
- Sura's Tamil Guide
- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM & TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's 5-in-1 with all 5 subjects in one guide (EM & TM)

**FULL YEAR GUIDES for 3 Terms together**
- Sura's Tamil Guide
- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's Map Workbook (EM & TM)



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## முதல் பருவம்



| அலகு | | இயல் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வரலாறு என்றால் என்ன? | 1-10 |
| 2. | | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 11-18 |
| 3. | | சிந்து வெளி நாகரிகம் | 19-29 |
| 4. | | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 30-41 |
| 1. | புவியியல் | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 42-51 |
| 2. | | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 52-61 |
| 1. | குடிமையியல் | பன்முகத் தன்மையினை அறிவோம் | 62-68 |
| 2. | | சமத்துவம் பெறுதல் | 69-74 |
| | முதல் பருவத் தொகுத்தறி தேர்வு - 2019 | | 75-80 |



## இரண்டாம் பருவம்



| அலகு | | இயல் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 81-92 |
| 2. | | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 93-104 |
| 3. | | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 105-113 |
| 1. | புவியியல் | வளங்கள் | 114-126 |
| 1. | குடிமையியல் | தேசியச் சின்னங்கள் | 127-133 |
| 2. | | இந்திய அரசமைப்புச் சட்டம் | 134-141 |
| 3. | பொருளியல் | பொருளியல் - ஓர் அறிமுகம் | 142-146 |
| | இரண்டாம் பருவத் தொகுத்தறி தேர்வு - 2019 | | 147-152 |



## மூன்றாம் பருவம்



| அலகு | | இயல் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | பண்டைக்கால தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்ககாலம் | 153-163 |
| 2. | | இந்தியா - மௌரியருக்குப் பின்னர் | 164-171 |
| 3. | | பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர் | 172-180 |
| 4. | | தென்னிந்திய அரசுகள் | 181-189 |
| 1. | புவியியல் | ஆசியா மற்றும் ஐரோப்பா | 190-202 |
| 2. | | புவி மாதிரி | 203-210 |
| 3. | | பேரிடரைப் புரிந்து கொள்ளுதல் | 211-215 |
| 1. | குடிமையியல் | மக்களாட்சி | 216-219 |
| 2. | | உள்ளாட்சி அமைப்பு - ஊரகமும் நகர்ப்புறமும் | 220-224 |
| 3. | | சாலை பாதுகாப்பு | 225-229 |
| | மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2018-19 | | 230-234 |





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 80562 94222 / 80562 15222

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
**email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755
Mobile : 80562 94222 / 80562 15222
E-mail : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# சமூக அறிவியல்

# முதல் பருவம்

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## முதல் பருவம்



| அலகு | | இயல் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வரலாறு என்றால் என்ன? | 3-10 |
| 2. | | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 11-18 |
| 3. | | சிந்து வெளி நாகரிகம் | 19-29 |
| 4. | | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 30-41 |
| 1. | புவியியல் | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 42-51 |
| 2. | | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 52-61 |
| 1. | குடிமையியல் | பன்முகத் தன்மையினை அறிவோம் | 62-68 |
| 2. | | சமத்துவம் பெறுதல் | 69-74 |
| | முதல் பருவத் தொகுத்தறி தேர்வு - 2018-19 | | 75-80 |



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# வரலாறு

## அலகு 1

# வரலாறு என்றால் என்ன?

### கற்றல் நோக்கங்கள்

- வரலாறு என்றால் என்ன என்று அறிந்துகொள்ளுதல்.
- வரலாற்றின் சிறப்பைப் புரிந்துகொள்ளுதல்.
- வரலாற்றுக்கு முந்தைய கால மனித இனத்தின் வாழ்வியல் முறையைத் தெரிந்துகொள்ளுதல்.
- பாறை ஓவியங்கள் அவர்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துவதை அறிதல்.
- வரலாறு மற்றும் வரலாற்று ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தினைத் தெரிந்துகொள்ளுதல்.



## பயிற்சிகள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி:**

**1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை** ⊗

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

**[விடை : ஆ] வேட்டையாடுதல்]**

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.**

**1. கூற்று : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.**

**காரணம் : குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்தபோது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.**

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.
இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

**[விடை : ஆ] கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி]**

**2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?**

அ) அருங்காட்சியகங்கள் ஆ) புதை பொருள்படிமங்கள்
இ) கற்கருவிகள் ஈ) எலும்புகள் **[விடை : அ] அருங்காட்சியகங்கள்]**

**3. தவறான இணையைக் கண்டுபிடி:**

அ) பழைய கற்காலம் - (i) கற்கருவிகள்
ஆ) பாறை ஓவியங்கள் - (ii) குகைச் சுவர்கள்
இ) செப்புத் தகடுகள் - (iii) ஒரு வரலாற்று ஆதாரம்
ஈ) பூனைகள் - (iv) முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**[விடை : ஈ] பூனைகள் - (iv) முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு]**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

**[விடை : இ] பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்]**

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் .................. . **[விடை : குகைகள்]**
2. வரலாற்றின் தந்தை .................. . ⊗ **[விடை : ஹெரோடோடஸ்]**
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு .................. . **[விடை : நாய்]**
4. கல்வெட்டுகள் .................. ஆதாரங்கள் ஆகும். **[விடை : தொல்பொருள்]**
5. அசோகச் சக்கரத்தில் .................. ஆரக்கால்கள் உள்ளன. **[விடை : 24]**

## IV. சரியா? தவறா?

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன. **[விடை : சரி]**
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. **[விடை : சரி]**
3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது. **[விடை : சரி]**

## V. பொருத்துக: ⊗

| | | | |
|---|---|---|---|
| அ) | பாறை ஓவியங்கள் | - (i) | செப்பேடுகள் |
| ஆ) | எழுதப்பட்டப் பதிவுகள் | - (ii) | மிகவும் புகழ்பெற்ற அரசர் |
| இ) | அசோகர் | - (iii) | தேவாரம் |
| ஈ) | மதச் சார்புள்ள இலக்கியம் | - (iv) | வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது |

**[விடை . அ] - iv, ஆ] - i, இ] - ii, ஈ] - iii]**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.

**1. நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறு.**

விடை. (i) நடந்து முடிந்த நிகழ்வுகளைக் குறித்து வைத்துக் கொள்ளவும்,

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நம் முன்னோர்கள் பயன்படுத்திய கற்கருவிகளைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைப் பற்றியும் நாட்குறிப்புகளை வைத்துக் கொண்டே நாம் தெரிந்து கொள்ள முடியும்.

**2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்?**

விடை. (i) அக்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கருவிகளிலிருந்தும்

(ii) பாறைகளின் மீது அவர்கள் தீட்டிய ஓவியங்களிலிருந்தும்

(iii) குகைச் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்களிலிருந்தும் அக்கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் அறிந்து கொள்ளலாம்.

**3. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச்சான்றா?**

விடை. ஆம்! கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றே!

**4. வரலாற்று தொடக்கக் காலம் (Proto History) என்றால் என்ன?**

விடை. வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தை வரலாற்று தொடக்கக் காலம் என்று அழைக்கலாம்.



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





**5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுது.**

**விடை.** இராமாயணம்/ மகாபாரதம்/ மணிமேகலை

## VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

**1. வரலாறு என்றால் என்ன?**

**விடை.** (i) 'வரலாறு' என்பது கடந்தகால நிகழ்வுகளின் 'காலவரிசைப் பதிவு'.

(ii) வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான 'இஸ்டோரியா' (Istoria) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'விசாரிப்பதன் மூலம் கற்றல்' என்பதாகும்.

**2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.**

**விடை.** (i) வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது மனிதன் முதன் முதலில் கற்கருவிகளைப் பயன்படுத்தியதற்கும், எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலமாகும்.

(ii) கற்கருவிகள், புதை படிவங்கள், பாறை ஓவியங்கள் போன்ற பலவற்றிலிருந்தும் வரலாற்றுத் தரவுகளைப் பெறுகிறோம்.

**3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?**

**விடை.** மலைப்பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் வரையப்பட்ட பாறை ஓவியங்கள், கற்கருவிகள், புதை படிவங்கள், தொல்லியல் அடையாளங்கள் இவை வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி நாம் அறியக்கூடிய சில சான்றுகள் ஆகும்.

**4. வரலாற்றுக்கு முந்தைய காலக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?**

**விடை.** (i) வரலாற்றுக்கு முந்தைய காலகருவிகள் கொண்டபூர், நெவாசா, மேர்காஷ் போன்ற இடங்களிலிருந்தும், பாறை-குகை வசிப்பிடங்களான பிம்பேட்கா மற்றும் எடக்கல் குகைகளிலிருந்தும் காணலாம்.

(ii) தமிழ்நாட்டில், அத்திரம்பாக்கம், அரியலூர், பெரம்பலூர், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்களிலிருந்தும் வரலாற்றுக்கு முந்தைய கால கருவிகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

**5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?**

**விடை.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த கல் ஆயுதங்கள், பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஈமத் தாழிகள், பழங்குடி மக்களின் வாழ்வியல் பொருட்கள் போன்றவை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) இவற்றின் மூலம் அக்கால மனிதர்களின் வாழ்க்கை முறையை அறிய முடிகிறது.

(iii) குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் வரைந்த ஓவியங்களின் புகைப்படங்கள், இரும்பு, வெண்கலம், தங்கம் போன்றவற்றால் செய்யப்பட்ட சிற்பங்கள் ஆகியவை அக்கால மனிதர்களின் திறமையை அறிந்து கொள்ள உதவுகிறது.

(iv) மாணவர்களுக்குப் பொதுஅறிவுக் களஞ்சியமாக பயன்படுகிறது.

**6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.**

**விடை.** (i) பாறைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கூர்மையான கற்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

(ii) ஒருவகை கற்கருவி - 'கண்ணீர்-துளி' போன்ற வடிவத்தில் அமைந்த மிகக் கூரான ஆயுதம்.

(iii) மற்றொரு வகை 'கற்கருவி'(Burin), உருண்டையான, ரம்பம் போன்ற கூர்மையான நுனிகளை உடையது.

(iv) இவை தவிர, மிருகங்களின் கொம்புகள், எலும்புகள், மரக்கிளைகளாலான கருவிகள் ஆகியனவும் பயன்படுத்தப்பட்டன.

**7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?**

**விடை.** (i) பாறைகளில் ஓவியங்கள் வரையப்பட்டதன் காரணம் எதிர்கால மக்களுக்கு இம்மக்களின் வாழ்க்கை முறைகளை தெரிவிப்பதற்காகவும்,

(ii) அக்கால மக்கள் தம் ஒவ்வொரு செயலையும் ஓவியமாகத் தீட்ட விருப்பம் கொண்டதற்காகவும் இருக்கலாம்.

(ii) பாறைகளில் ஓவியங்கள் தீட்டினால் நெடுங்காலம் அவை அழியாமல் இருக்கும் என நினைத்திருக்கலாம்.

www.surabooks.com

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**8. தொல் கைவினைப் பொருட்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

விடை. (i) மண் பொம்மைகள், ஆபரணங்கள், மட்பாண்டங்கள், கற்கருவிகள் இவையாவும் மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும்.

(ii) கற்களாலும், உலோகங்களாலும் மற்றும் மண்ணைக் கொண்டு ஒரு வடிவத்தை ஏற்படுத்தி அதை (தொல்லியல்) கைவினைப் பொருட்களாகவே பயன்படுத்தி வந்தனர்.

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்.

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?** ⊗

விடை. (i) வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்கள் வாழ்ந்த குகையினுள் கொடிய மிருகங்கள் வர வாய்ப்பிருந்தது.

(ii) இதிலிருந்து தப்பிக்க நாயினுடைய மோப்ப சக்தி உதவும் என்பதை மனிதன் அறிந்து கொண்டான்.

(iii) எனவே குகைகளில் விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து, குரைத்தவாறு அவனுக்கு உணர்த்தின.

(iv) ஆகவே, வேட்டையாடுவதற்கும், பாதுகாப்பிற்கும் நாய்கள் பயனுள்ளதாக இருந்தன.

**2. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.**

விடை.

| வ.எண். | பழைய கற்கால மனிதன் | தற்கால மனிதன் |
|---|---|---|
| 1. | நாடோடி வாழ்க்கை. | நகரமோ, அல்லது கிராமமோ ஒரே இடத்தில் வாழ்க்கை. |
| 2. | குகைகளிலும், மரப் பொந்துகளிலும் பாதுகாப்பின்றி வாழ்ந்தனர். | பாதுகாப்பான வீடுகளில் வாழ்கின்றனர். |
| 3. | மரப்பட்டைகள், இலைகள், விலங்கின் தோல் ஆகியவற்றை ஆடையாக அணிந்தனர். | பட்டு, பருத்தி ஆகியவற்றால் நெய்யப்பட்ட துணிமணிகளை அணிகின்றனர். |
| 4. | இயற்கையாகக் கிடைத்த கிழங்கு, காய், கனிகளை உண்டனர். | சிறந்த உணவு வகைகளை சமையல் செய்து உண்ணுகிறார்கள். |
| 5. | ஒவ்வொரு நாளும் போராட்டமான வாழ்க்கை. | நவீன கண்டுபிடிப்புகளால் சொகுசான வாழ்க்கை முறை. |

## IX. மாணவர் செயல்பாடு.

**1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தது?**

அ) ஆதிச்சநல்லூரில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகள்
ஆ) வேள்விக்குடி செப்பேடுகள்
இ) மகாபாரதம்
ஈ) சாஞ்சி ஸ்தூபி
உ) பட்டினப்பாலை
ஊ) கீழடியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள்
எ) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பொம்மைகள்
ஏ) தஞ்சை பெரிய கோவில்

விடை. அ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
ஆ] கல்வெட்டுகள் (தொல் பொருள்கள்)
இ] மதசார்புள்ள இலக்கியம் – இதிகாசங்கள்
ஈ] நினைவுச் சின்னங்கள் (தொல் பொருள்கள்)
உ] இலக்கிய ஆதாரங்கள்
ஊ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
எ] கலைப்பொருட்கள் (தொல் பொருள்கள்)
ஏ] நினைவுச் சின்னங்கள் (தொல் பொருள் ஆதாரங்கள்)



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





## X. வாழ்க்கைக் கல்வி

1. **களிமண்ணைக் கொண்டு பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் மாதிரிகள் தயார் செய்க.**

**எ.கா. :**











## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| **அன்று மனிதர்கள் என் மீது கிறுக்கினார்கள்; வண்ண மை கொண்டு ஓவியம் வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார்?**<br>**விடை :** பாறை | **ஏதேனும் இரு தொல்பொருள் ஆதாரங்களைக் கூறு**<br>**விடை :** 1. தொல் கைத்திறன் பொருட்கள்<br>2. நினைவுச்சின்னங்கள்<br>3. கல்வெட்டுகள் | **இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு.**<br>**விடை :** 1. மதசாற்பற்றவை<br>2. மதசார்புள்ளவை |
| **பொ.ஆ.மு - இதன் விரிவாக்கம் என்ன?**<br>**விடை :** பொது ஆண்டிற்கு முன் | **“இஸ்டோரியா” என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள் ?**<br>**விடை :** விசாரிப்பதன் மூலம் கற்றல் | **பொ.ஆ- இதன் விரிவாக்கம் என்ன?**<br>**விடை :** பொது ஆண்டு |
| **கல்வெட்டுக்கு குறிப்புகளைப் பற்றி ஆராயும் துறை ............... .**<br>**விடை :** கல்வெட்டியல் | **நாணயங்களை ஆராயும் துறை .................... .**<br>**விடை :** நாணயவியல் | **நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார்?**<br>**விடை :** வரலாற்று ஆதாரங்கள் |

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000


This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**XII. வரைபடம்**

**1. இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்**

டெல்லி சென்னை தமிழ்நாடு ஆந்திர பிரதேசம்
கேரளா கர்நாடகா.




## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி:**

**1. 'தர்மா' என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள் ......................... .**

அ) பிச்சை ஆ) சிந்தனை
இ) அறநெறி ஈ) கட்டுப்பாடு **[விடை : இ) அறநெறி]**

**2. 'தம்மா' என்பது ஒரு .................... சொல்.**

அ) சமஸ்கிருத ஆ) மண்டாரின்
இ) ஜப்பானிய ஈ) பிராகிருத **[விடை : ஈ) பிராகிருத]**

முதல் பருவம்

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.**

**1. கூற்று : கலிங்கப்போருக்குப்பின், பேரரசர் அசோகர் போர் தொடுப்பதை கைவிட்டார்.**
**காரணம் : பல உயிர்கள் போரில் மடிவதைக் கண்டு மனம் வருந்தினார்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு.

**[விடை : ஆ] கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி]**

**2. கூற்று : பெரிய கோயிலைக் கட்டுவித்தவர் இராஜராஜ சோழர். இக்கூற்றுடன் தொடர்புடையது எது?**

அ) கும்பகோணம்
ஆ) திருச்சி
இ) மதுரை
ஈ) தஞ்சாவூர்

**[விடை : ஈ] தஞ்சாவூர்]**

**3. தவறான இணையைக் கண்டுபிடி:**

அ) அரண்மனை - (i) திருமலை நாயக்கர் மஹால்
ஆ) 24 ஆரக்கால் சக்கரம் - (ii) சாஞ்சி ஸ்தூபி
இ) நாணயவியல் - (iii) நாணயம் சார்ந்த துறை
ஈ) கல்வெட்டியல் - (iv) கல்வெட்டு துறை

**[விடை : ஆ] 24 ஆரக்கால் சக்கரம் - (ii) சாஞ்சி ஸ்தூபி]**

**4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

அ) உலகில் முதன் முதலாக விலங்குகளுக்கு தனி மருத்துவமனை அமைத்துத் தந்தவர் அசோகர்.
ஆ) சாஞ்சி ஸ்தூபி, மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
இ) சாரநாத் தூண் உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.
ஈ) வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் அசோகரின் வரலாறு தொகுக்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டது.

**[விடை : ஈ] வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் அசோகரின் வரலாறு தொகுக்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டது]**

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. 'இஸ்டேரியா' என்பது ................. மொழியின் சொல். **[விடை : கிரேக்க]**
2. திருவாசகம் என்பது .................. இலக்கியங்களில் ஒன்று **[விடை : பக்தி]**

**IV. சரியா? தவறா?**

1. அசோகர் குறித்த தகவல்கள் வரலாற்றின் பக்கங்களில் 20ஆம் நூற்றாண்டு வரை இடம் பெறவே இல்லை. **[விடை : சரி]**
2. நாட்டுப்புற கதைப்பாடல்கள், மதசார்பற்ற இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. **[விடை : தவறு]**
3. பழங்கால மனிதர்கள் வேட்டையாடப் போகும்போது பாதுகாப்பிற்காக நாய்களை உடன் அழைத்துச் சென்றனர். **[விடை : சரி]**

**V. பொருத்துக:**

அ) பக்தி இலக்கியம் - (i) சாஞ்சி
ஆ) இதிகாசம் - (ii) இராமாயணம்
இ) மடங்கள் - (iii) தேவாரம்
ஈ) ஸ்தூபி - (iv) டபாங்

**[விடை . அ] - iii, ஆ] - ii, இ] - iv, ஈ] - i]**

**VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.**

**1. மூன்று பக்தி இலக்கியங்களின் பெயர்களைக் கூறு.**

விடை. **(i)** தேவாரம் **(ii)** நாலாயிர திவ்ய பிரபந்தம் **(iii)** திருவாசகம்

**2. சாரநாத் கற்றூணின் முக்கியத்துவம் என்ன?**

விடை. நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள இலச்சினை ஆகும்.

**3. மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்குக் கொண்டுவந்தவர்கள் யாவர்?**

விடை. ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களான வில்லியம் ஜோன்ஸ், ஜேம்ஸ் பிரின்செப், அலெக்ஸாண்டர் கன்னிங்காம் போன்றவர்கள் வரலாற்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள் தான் மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்குக் கொண்டுவந்தன.

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## அலகுத் தேர்வு

நேரம்: 40 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** (2 × 1 = 2)

1. **பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை.**
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. **'தம்மா' என்பது ஒரு .................... சொல்.**
   அ) சமஸ்கிருத ஆ) மண்டாரின் இ) ஜப்பானிய ஈ) பிராகிருத

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக :** (1 × 1 = 1)

1. **கூற்று :** பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.
   **காரணம் :** குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.
   அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.
   இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக :** (3 × 1 = 3)

1. வரலாற்றின் தந்தை ........................... .
2. அசோகச் சக்கரத்தில் .......................... ஆரக்கால்கள் உள்ளன.
3. 'இஸ்டோரியா' என்பது .......................... மொழியின் சொல்.

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.
2. அசோகர் குறித்த தகவல்கள் வரலாற்றின் பக்கங்களில் 20ஆம் நூற்றாண்டு வரை இடம் பெறவே இல்லை.

**V. பொருத்துக :** (4× 1 = 4)

| | | |
|---|---|---|
| அ) அசோகர் | - | (i) டபாங் |
| ஆ) எழுதப்பட்டப் பதிவுகள் | - | (ii) சாஞ்சி |
| இ) மடங்கள் | - | (iii) செப்பேடுகள் |
| ஈ) ஸ்தூபி | - | (iv) மிகவும் புகழ்பெற்ற அரசர் |

**VI. சுருக்கமான விடை தருக.** (4 × 2 = 8)

1. வரலாறு என்றால் என்ன?
2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.
3. மூன்று பக்தி இலக்கியங்களின் பெயர்களைக் கூறு.
4. சாரநாத் கற்றூணின் முக்கியத்துவம் என்ன?

**VII. விரிவான விடை தருக :** (1 × 5 = 5)

1. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை.

## விடைகள்

**I.** 1. ஆ) வேட்டையாடுதல் 2. ஈ) பிராகிருத
**II.** 1. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
**III.** 1. ஹெரோடோடஸ் 2. 24 3. கிரேக்க
**IV.** 1. சரி 2. சரி
**V.** அ) – iv, ஆ) – iii, இ) – i, ஈ) – ii
**VI.** 1. பார்க்க பக்கம் 5, வினா எண் 1.
2. பார்க்க பக்கம் 5, வினா எண் 2.
3. பார்க்க பக்கம் 9, வினா எண் 1.
4. பார்க்க பக்கம் 9, வினா எண் 2.
**VII.** 1. பார்க்க பக்கம் 5, வினா எண் 5.



www.surabooks.com

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# சமூக அறிவியல்

# இரண்டாம் பருவம்

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## இரண்டாம் பருவம்



| அலகு | | இயல் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | வரலாறு | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 83-92 |
| 2. | | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 93-104 |
| 3. | | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 105-113 |
| 1. | புவியியல் | வளங்கள் | 114-126 |
| 1. | குடிமையியல் | தேசியச் சின்னங்கள் | 127-133 |
| 2. | | இந்திய அரசமைப்புச் சட்டம் | 134-141 |
| 3. | பொருளியல் | பொருளியல் - ஓர் அறிமுகம் | 142-146 |
| | | இரண்டாம் பருவத் தொகுத்தறி தேர்வு - 2019 | |





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# வரலாறு

## அலகு 1

## வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆரியர்கள் முதலில் ________ பகுதியில் குடியமர்ந்தனர்.** ⊗

அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி
இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு **[விடை: அ) பஞ்சாப்]**

**2. ஆரியர்கள் ________ லிருந்து வந்தனர்.**

அ) சீனா ஆ) வடக்கு ஆசியா
இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா **[விடை: இ) மத்திய ஆசியா]**

**3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ________ லிருந்து எடுக்கப்பட்டது.**

அ) பிராமணா ஆ) ஆரண்யகா
இ) வேதம் ஈ) உபநிடதம் **[விடை: ஈ) உபநிடதம்]**

**4. வேதகாலத்தில் என்ன விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது?**

அ) 1/3 ஆ) 1/6 இ) 1/8 ஈ) 1/9 **[விடை: ஆ) 1/6]**

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கிய சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகளும் கிடைத்துள்ளன.**

**காரணம் : நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.**

அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி; காரணம் தவறு
ஈ) கூற்று தவறு; காரணம் சரி **[விடை: ஈ) கூற்று தவறு; காரணம் சரி]**

**2. கூற்று 1 : தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன் மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.**

**காரணம் 2 : இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.**

அ) கூற்று 1 தவறானது ஆ) கூற்று 2 தவறானது
இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை
ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை **[விடை: இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை]**

**3. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது?**

அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்
ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.
இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.
ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது.

**[விடை: ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.]**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது?**

அ) கிராமா < குலா < விஷ் < ராஸ்டிரா < ஜனா

ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா

இ) ராஸ்டிரா < ஜனா < கிராமா < குலா < விஷ்

ஈ) ஜனா < கிராம < குலா < விஷ் < ராஸ்டிரா

**[விடை: ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா]**

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வேதப்பண்பாடு ____________ இயல்பைக் கொண்டிருந்தது. **[விடை: ரத்த உறவு]**
2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து ____________ என்ற வரி வசூலிக்கப்பட்டது. **[விடை: பாலி]**
3. __________ முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும். **[விடை: குருகுலக்கல்வி]**
4. ஆதிச்சநல்லூர் ____________ மாவட்டத்தில் அமைந்துள்ளது. **[விடை: தூத்துக்குடி]**

## IV. சரியா? தவறா?

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியத் தொல்பொருட்கள் இந்திய-ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன. **[விடை: சரி]**
2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும். **[விடை: சரி]**
3. படைத்தளபதி 'கிராமணி' என அழைக்கப்பட்டார். **[விடை: தவறு]**
4. கருப்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும். ⨶ **[விடை: சரி]**
5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. **[விடை: சரி]**

## V. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | கீழடி | - 1. | பகடை |
| ஆ) | பொருந்தல் | - 2. | கொழு முனைகள் |
| இ) | கொடுமணல் | - 3. | சுழல் அச்சுக்கள் |
| ஈ) | ஆதிச்சநல்லூர் | - 4. | தங்க ஆபரணங்கள் |

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2

இ) 1 3 4 2 ஈ) 1 2 3 4 **[விடை: ஈ) 1 2 3 4]**

## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.

**1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.** ⨶

விடை. **நான்கு வேதங்களின் பெயர்கள் :**

1. ரிக்
2. யஜுர்
3. சாம
4. அதர்வனம்

**2. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?**

விடை. குதிரைகள், பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காளைகள் மற்றும் நாய்கள் ஆகியவை வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் ஆகும்.

**3. 'பெருங்கற்காலம்' பற்றி நீங்கள் அறிந்தது என்ன?**

விடை. இறந்தவர்களைப் புதைத்த இடங்களை கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

**4. 'கற்திட்டைகள்' என்பது என்ன?** ⨶

விடை. இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறமும் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை வைக்கப்படுவதே கற்திட்டைகள் எனப்படும்.

**5. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?**

விடை. முதுமக்கள் தாழிகள் என்பது இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண் பானைகள் ஆகும்.



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





**6. வேதகாலத்தில் வணிகப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக.**

**விடை.** வேதகாலத்தில் நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்களையும், கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாணயங்களையும் வணிகத்தில் பயன்படுத்தினர்.

**7. தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**விடை.** 1. கற்திட்டைகள் (Dolmeas) 2. நினைவு கற்கள் (Menhir)
3. நடுகற்கள் 4. முதுமக்கள் தாழிகள்

ஆகியவை தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் ஆகும்.

## VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

**1. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாய் எழுதுக.** ⊗

**விடை.**
1. பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணல் என்னும் இடம் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.
2. இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
3. மேலும் நூல் சுற்றி வைக்கப் பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.
4. புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

**2. வேதகால பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.**

**விடை. வேதகால பெண்கள் :**
1. ரிக் வேதகாலத்தில் பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரம் பெற்று இருந்தனர்.
2. மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார்.
3. குழந்தைத் திருமணத்தையும், உடன்கட்டை ஏறுதலையும் அறிந்திருக்கவில்லை.
4. கைம்பெண்கள் மறுமணம் செய்யத் தடைகள் இல்லை.
5. பெண்களுக்கு சொத்து உரிமை கிடையாது.
6. பொது நிகழ்வுகளில் பெண்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை.
7. பின் வேதகாலத்தில் கைம்பெண் மறுமணத்திற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை.
8. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.
9. சாதிகளுக்கு இடையிலான திருமணம் நிராகரிக்கப்பட்டது.

## VIII. உயர் சிந்தனை வினா :

**1. குருகுலக் கல்வி முறைக்கும் நவீன கல்விமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

**விடை.**

| எண் | குருகுலக் கல்விமுறை | நவீன கல்விமுறை |
|---|---|---|
| 1. | இது பழங்கால கல்விமுறை | இது நவீன/தற்போதைய கல்வி முறை. |
| 2. | இம்முறையில் மாணவர்கள் குருவுடன் தங்கியிருந்து அவருக்குச் சேவை செய்து, கல்வியும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்வர். | இம்முறையில் மாணவர்கள் தினமும் பள்ளிக்குச் சென்று அங்கு கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் பல்வேறு விஷயங்கள் பற்றி அறிந்துக் கொள்வர். |
| 3. | இதில் மாணவன் குருவை சார்ந்து இருப்பான். | இதில் மாணவன் பெற்றோரைச் சார்ந்து இருப்பான். |
| 4. | இம்முறையில் வாய்மொழியாக பாடங்களை மாணவர்கள் கற்றனர். | இம்முறையில் மனப்பாடம் செய்து தேர்வு எழுதி, மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் பாடங்களை கற்கின்றனர். |
| 5. | இம்முறையில் வேதங்கள் இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், ஜோதிடம், கணிதம், இராணுவ உத்திகள் ஆகியன மாணவர்களுக்கு கற்றுத் தரப்பட்டன. | இம்முறையில் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், விளையாட்டு, யோகா, கணினி பயன்பாடு ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. |

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## IX. பெருமிதமும் மகிழ்ச்சியும் -உண்மைகளை நாம் கண்டறிவோம்.

விடை.

| தொல்பொருள் ஆய்விடங்கள் | தொல்லியல் கண்டுபிடிப்புகள் | உண்மைகள் |
|---|---|---|
| ஆதிச்சநல்லூர் | தமிழ் – பிராமி எழுத்துக்கள் | வரலாற்றுக்கு முந்தைய பண்பாடு இருந்துள்ளது. |
| கீழடி | ரோமானிய தொல் பொருட்கள் | இது கி.மு. 200ம் ஆண்டைச் சார்ந்தது. இந்தியா – ரோம் இடையே வணிகத் தொடர்பு இருந்தது. |
| பையம்பள்ளி | இரும்புக் கருவிகள் | இப்பண்பாடு கி.மு. 1000 என கணிக்கப்பட்டுள்ளது. இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்று. |
| பொருந்தல் | அரிசி நிரப்பப்பட்ட பானை | மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்து வந்துள்ளது. |
| கொடுமணல் | சுழல் அச்சுக்கள் | இந்த இடம் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளது. துணிமணிகள், அணிகலன்கள் உருவாக்கம், மற்றும் வெளிநாட்டு வணிகம், நடைபெற்றது. |

## X. மாணவர் செயல்பாடு :

**1. புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குதல்.**
**(சுருதி, கிராமணி, ராஷ்ட்ரா, இரும்புக் காலம், நாடோடிகள், பண்டமாற்று)**

விடை. 1. **சுருதி** – நான்கு வேதங்களை உள்ளடக்கியது **சுருதி** ஆகும். பாடல் பாடும் போது **சுருதி**யுடன் சேர்ந்து பாட வேண்டும்.

2. **கிராமணி** – கிராமத்தின் தலைவர் **கிராமணி** எனப்படுவார்.

3. **ராஷ்ட்ரா** – **ராஷ்ட்ரா** என்பது ரிக் வேத காலத்தில் இருந்த பல இனக் குழு அரசுகள் ஆகும்.

4. **இரும்புக்காலம்** – கி.மு.500 தொடங்கி, கி.பி.300 வரையிலான 800 ஆண்டுகள் காலத்திய தமிழகத்தின் வரலாற்றினை **இரும்புக் காலம்** என்று தொல்லியலாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

5. **நாடோடிகள்** – நிரந்தரமாக எந்த ஒரு இடத்திலும் தங்கி வாழாமல், பல்வேறு இடங்களுக்குச் சென்று பிழைப்பு நடத்துபவர்கள் **நாடோடிகள்** ஆவர்.

6. **பண்டமாற்று** – **பண்டமாற்று** முறை நாணயங்கள் வரும் முன்பு நடைமுறையில் இருந்தது. ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளை வாங்குவது **பண்டமாற்று** முறை ஆகும்.

**2. வார்த்தை விளையாட்டு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | மி | ச | ரி | சு | பௌ | த | இ | ஸ |
| ச | இ | த | ம | ம் | க் | ஸ் | ரு | பா |
| அ | டை | ட் | தி | ற் | க | க | ம் | ங் |
| ந | பு | ள் | ம | ண | ம் | மா | பு | ச |
| ஸ் | ம | கை | ப | ர் | ங் | மெ | க் | த் |
| க | மி | ர | ணி | ஸ் | வி | ரா | கா | ம |
| ல் | கா | ரு | யா | சே | த | ர் | ல | னா |
| ய | கௌ | ர் | தி | ஷ் | வெ | னா | ம் | ளி |
| ஸு | க | ணா | டி | தி | பு | ப் | ரு | நெ |

1. ஒரு கணவாய்
2. மத போதனைக் கொண்ட நூல்
3. கிராமங்களின் தொகுதி
4. இனக்குழு மன்றம்
5. மக்கள் மன்றம்
6. அக்னி
7. தங்க நாணம்
8. வேதகாலம்
9. இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னம்.

**விடைகள்:**
1. கைபர்
2. ஸ்மிருதி
3. விஸ்
4. கணா
5. சமிதி
6. நெருப்பு
7. சத்மனா
8. இரும்புக்காலம்
9. கற்திட்டை.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**XI. வாழ்க்கைத் திறன் :**

**1. ஆசிரியரின் உதவியோடு செய்தித்தாள்களிலிருந்து தொல்லியல் கண்டுபிடிப்புகள் குறித்த செய்திகளைச் சேகரிக்கவும்.**

**விடை.** மாணவர்கள் தாங்களாகவே செய்திக் குறிப்புகளிலிருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

(எ.கா) கீழடி, சிவகங்கை மாவட்டம்.

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன. மேலும் தமிழ் – பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள், செம்மணிகள், வெண்கலப்படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை 'கதிரியக்க கார்பன் வயதுக் கணிப்பு' முறையில் கணிக்க அமெரிக்காவில் ஃபுளோரிடா என்னும் இடத்தில் உள்ள பீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது. அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு. 200ஐச் சார்ந்தது என்பது தெரிய வந்துள்ளது. இங்கு ரோம் நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும்.

**XII. கட்டக வினாக்கள் :**

| | | |
|---|---|---|
| இரண்டு இதிகாசங்களைக் குறிப்பிடவும்<br>**விடை :**<br>1. இராமாயணம்<br>2. மகாபாரதம் | இறந்தவரின் நினைவாக நடப்படும் ஒற்றைக் கல்தூணின் பெயர்.<br>**விடை :** நினைவுக் கற்கள் | சிவகங்கை மாவட்டத்திலுள்ள சங்க காலத்தைச் சேர்ந்த நகரத்தின் பெயர்.<br>**விடை :** கீழடி |
| தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது இரண்டு இரும்புக்கால வாழ்விடங்களின் பெயர்களைக் கூறுக.<br>**விடை :**<br>1. ஆதிச்சநல்லூர்<br>2. பையம்பள்ளி | தொடக்க கால ஆரியர்கள் பின்பற்றிய வேளாண்முறை என்ன?<br>**விடை :**<br>அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண் முறை. | வேதகாலத்தில் உருவான இரண்டு பெரிய நகரங்களின் பெயரென்ன?<br>**விடை :**<br>1. அயோத்தி<br>2. இந்திரபிரஸ்தம் |

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. _______ நாகரிகத்தின் சரிவோடு இந்தியாவில் நகரமயமாதலின் முதல் கட்டம் ஒரு முடிவிற்கு வந்தது.**

அ) சிந்துவெளி ஆ) வேத கால
இ) வெண்கலக் கால ஈ) இவற்றில் ஏதுவுமில்லை

**[விடை: (அ) சிந்துவெளி]**

**2. வேதகால அரசியல் _______________ அடிப்படையாகக் கொண்டது.**

அ) பொருளாதாரத்தை ஆ) இரத்த உறவை இ) ஆன்மிகத்தை ஈ) வன்முறையை

**[விடை: (ஆ) இரத்த உறவை]**

**3. ரிக் வேதகால ஆரியர்களின் முக்கிய சொத்து _______________ ஆகும்.**

அ) நிலம் ஆ) தங்க நாணயங்கள்
இ) கால்நடைகள் ஈ) உணவு தானியங்கள்

**[விடை: (இ) கால்நடைகள்]**

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**4. விசய பதி இதற்குத் தலைவர்:**

அ) ராஷ்ட்ரா ஆ) கிராமம் இ) குலம் ஈ) இனக் குழு

**[விடை: (இ) குலம்]**

**5. அரசியல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய விஷயங்களில் அரசனுக்கு ________ உதவி செய்தார்.**

அ) கிராமணி ஆ) சேனானி இ) புரோகிதர் ஈ) விதாதா

**[விடை: (ஆ) சேனானி]**

**6. ஆரியர் அல்லாத மக்கள் ________ என்று அழைக்கப்பட்டனர்.**

அ) ஜனா ஆ) தசயுக்கள் இ) சபா ஈ) சமிதி

**[விடை: (ஆ) தசயுக்கள்]**

**7. பின்வேதகாலத்தில் பெண்களின் பங்கும், அவர்களுக்கான நிலையும் ________.**

அ) அதிகரித்தது ஆ) குறைந்து போனது

இ) முன்னிருந்த நிலையிலேயே இருந்தது ஈ) ஆண்களுக்கு நிகராக இருந்தது

**[விடை: (ஆ) குறைந்து போனது]**

**8. ஆரியர்களின் முதன்மையான பயிர் ________.**

அ) அரிசி ஆ) கோதுமை இ) பருத்தி ஈ) பார்லி

**[விடை: (ஈ) பார்லி]**

**9. பையம் பள்ளி ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.**

அ) வேலூர் ஆ) மதுரை இ) சிவகங்கை ஈ) திண்டுக்கல்

**[விடை: (அ) வேலூர்]**

## II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. கூற்று : பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.**

**காரணம் : காஞ்சிபுரம் மாவட்டதிலுள்ள வீரராகவபுரத்தில் பெருங்கற்கால நினைவுச்சின்னங்களில் ஒன்றான கற்திட்டைகள் காணப்படுகின்றன.**

அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி; காரணம் தவறு

ஈ) கூற்று தவறு; காரணம் சரி

**[விடை: அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

**2. கூற்று 1 : ஆரியர்கள் இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து செல்லக் கூடிய கால்நடை மேய்ப்பர்கள் ஆவர்.**
**காரணம் 2 : அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண் முறையையும் அவர்கள் பின்பற்றினர்.**

அ) கூற்று 1 தவறானது ஆ) கூற்று 2 தவறானது

இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

**[விடை: இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை]**

**3. வேதகால பொருளாதாரம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது?**

அ) மரவேலை செய்வோரும், மட்பாண்டங்கள் செய்வோரும் இருந்தனர்.

ஆ) ஒவ்வொரு வருடமும் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

இ) அவர்களின் முதன்மைப் பயிர் கோதுமை ஆகும்.

ஈ) பண்டமாற்று முறை பரவலாகக் காணப்பட்டது.

**[விடை: இ) அவர்களின் முதன்மைப் பயிர் கோதுமை ஆகும்]**

**4. வேதகால சமூக அமைப்பு தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?**

அ) ஒருவர் தனது விவசாய மகசூலில் 1/4 பங்கை 'பாலி' வரியாக செலுத்த வேண்டும்.

ஆ) 'தசயுக்கள்' என்று ஆரியர்கள் அழைக்கப்பட்டனர்.

இ) போர்வீரர்கள் சத்ரியர்கள் என அழைக்கப்பட்டனர்.

ஈ) பலதார மணம் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை.

**[விடை: இ) போர்வீரர்கள் சத்ரியர்கள் என அழைக்கப்பட்டனர்]**



www.surabooks.com

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேதகாலம் குறித்து கற்க ____________ சான்றுகள் போதுமான அளவு இல்லை. **[விடை: பயன்பாட்டுப் பொருள்]**
2. ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து ____________ -இல் குடியமர்ந்தனர். **[விடை: சிந்து கங்கைச் சமவெளி]**
3. ஸ்மிருதிகள் என்பவை ____________ அல்ல. **[விடை: நிலையானவை]**
4. ____________ என்பதே அரசியலின் அடிப்படை அலகு ஆகும். **[விடை: குலம்]**
5. மூத்தோர்களைக் கொண்ட மன்றம் ____________ எனப்பட்டது. **[விடை: சபா]**
6. மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு ____________ ஆகும். **[விடை: சமிதி]**
7. வேத கால சமூகம் என்பது ____________ சமூகமாகும். **[விடை: தந்தை வழி]**
8. பின் வேத காலத்தில் ____________ தொடர்பான விதிகள் இறுக்கமும், குழப்பமும் பெற்றன. **[விடை: திருமணம்]**
9. புனிதமான விலங்காக ____________ கருதப்பட்டது. **[விடை: பசு]**
10. காடுகளுக்குச் சென்று தவம் செய்தல் __________ என அழைக்கப்பட்டது. **[விடை: வனப்பிரஸ்தம்]**

**IV. சரியா? தவறா?**

1. வேத காலம் என்பது இந்திய வரலாற்றில் கி.மு. 1500 – 600 காலகட்டமாகும். **[விடை: சரி]**
2. இதிகாசங்களை உள்ளடக்கிய வேதகால இலக்கியப் பிரிவு சுருதிகள் ஆகும். **[விடை: தவறு]**
3. ஸ்மிருதிகள் தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகுபவை ஆகும். **[விடை: சரி]**
4. கிராமத்திற்குத் தலைவர் ராஜன் என்று அழைக்கப்பட்டார். **[விடை: தவறு]**
5. அரசர் தனது நிலைமையை வலுபடுத்திக் கொள்ள பல சடங்குகளையும் யாகங்களையும் செய்தார். **[விடை: சரி]**
6. தொடக்க வேதகால சமுதாயத்துக்குள் மூன்று பிரிவுகள் காணப்பட்டன. **[விடை: சரி]**
7. இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும் நினைவு கற்கள் பழனிக்கு அருகேயுள்ள மானூரில் காணப்படுகின்றன. **[விடை: தவறு]**
8. 'சப்த சிந்து' என்பது ஏழு மலைகள் கொண்ட நிலப்பகுதி என்றழைக்கப்பட்டது. **[விடை: தவறு]**
9. 'சுருதி' என்பதன் பொருள் இறுதியான எழுதப்பட்ட பிரதி என்பதாகும். **[விடை: தவறு]**

**V. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | சுருதிகள் | - 1. | கிராமத்தலைவர் |
| ஆ) | ஸ்மிருதிகள் | - 2. | படைத்தளபதி |
| இ) | சேனானி | - 3. | புராணங்கள் |
| ஈ) | கிராமணி | - 4. | பிராமணங்கள் |

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2
இ) 1 3 4 2 ஈ) 1 2 3 4 **[விடை: அ) 4 3 2 1]**

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.**

**1. 'ஜனா' வின் தலைவர் ராஜனின் முக்கியப் பொறுப்பு என்ன?**

**விடை.** தனது இனக்குழுவைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பதே ராஜனின் பொறுப்பாகும்.

**2. நான்கு இனக்குழு மன்ற அமைப்புகளின் பெயர்களை எழுதுக.**

**விடை.** 1. விதாதா 2. சபா 3. சமிதி 4. கணா

**3. ஆரியர்கள் பயன்படுத்திய தங்க நாணயங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

**விடை.** நிஷ்கா, சத்மனா.

**4. ரிக் வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள் யாவை?**

**விடை.** 1. தங்கம் (ஹிரண்யா) 2. இரும்பு (சியாமா) 3. தாமிரம் (அயாஸ்)

**5. வேத காலத்தை வகைப்படுத்துக.**

**விடை.**

வேதகாலத்தின் இரண்டு கட்டங்கள்

- தொடக்க வேதகாலம்
  கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 1000
- பின் வேதகாலம்
  கி.மு. (பொ.ஆ.மு) 1000 – 600

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

**1. ஆரியர்கள் என்போர் யார்?**

**விடை.** 1. ஆரியர்கள் இந்தோ–ஆரிய மொழி பேசும், இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து செல்லக்கூடிய கால்நடை மேய்ப்பவர்கள் ஆவர். இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து அலையலையாகக் குடிபெயர்ந்து இந்துகுஷ் மலைகளிலுள்ள கைபர் கணவாய் வழியாக வந்தனர்.

2. கால்நடைகளை மேய்ப்பதே இவர்களின் முதன்மைத் தொழில் என்றாலும் அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண் முறையையும் பின்பற்றினர்.

**2. ஆரியர்களும் இந்தியாவில் அவர்களின் வாழ்விடங்களும் - என்பதைப் பற்றி குறிப்பு வரைக.**
**ஆரியர்களும் இந்தியாவில் அவர்களின் வாழ்விடங்களும்:**

**விடை.** 1. ரிக்வேதகால ஆரியர்கள் நாடோடிகள் ஆவர். அடிப்படையில் மேய்ச்சல் சமூகத்தினரான அவர்களுக்கு கால்நடைகள் முக்கிய சொத்து ஆகும்.

2. ரிக்வேத காலத்தில் ஆரியர்களின் வாழ்விடம் பஞ்சாப் ஆகும். அப்போது அப்பகுதி 'சப்த சிந்து' அதாவது ஏழு ஆறுகள் ஓடும் நிலப்பகுதி என்றழைக்கப்பட்டது.

3. ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 1000–இல் ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து சிந்து கங்கைச் சமவெளியில் குடியமர்ந்தனர்.

4. இரும்புக் கோடரி, இரும்பினாலான கொழுமுனையைக் கொண்ட கலப்பை ஆகியவற்றைப் பரவலாக பயன்படுத்தினர்.

**3. வயதின் அடிப்படையில் நான்கு ஆஸ்ரமங்களைக் குறித்து எழுதுக.**

**விடை. நான்கு ஆஸ்ரமங்கள் (வயதின் அடிப்படையில்) :** பின்வேதகால இறுதியில் வாழ்க்கையின் நான்கு நிலைகள் (நான்கு ஆஸ்ரமங்கள்) என்ற கோட்பாடு உருவாயின.

1. பிரம்மச்சரியம் (மாணவப் பருவம்) 2. கிரகஸ்தம் (திருமண வாழ்க்கை)
3. வனப்பிரஸ்தம் (காடுகளுக்குச் சென்று தவம் செய்தல்)
4. சன்னியாசம் (மோட்சம் அடைவதற்காக துறவற வாழ்க்கை மேற்கொள்ளல்)

## பாடப்பகுதி உள்வினா

## உயர் சிந்தனை வினா

**1. சிந்து வெளி மற்றும் வேத கால நாகரிகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை எழுதுக.**

**விடை.**

| | சிந்து வெளி நாகரிகம் | வேத கால நாகரிகம் |
|---|---|---|
| 1. | தொல்லியல் ஆய்வுகளின் மூலமாக கிடைத்த சான்றுகளால் அறியப்பட்டது. | வேத கால இலக்கிய சான்றுகள் அதிகம். ஆனால் பயன்பாட்டு சான்றுகள் போதுமான அளவு இல்லை. |
| 2. | கி.மு. 3000 முதல் கி.மு. 2500 வரை இதன் கால அளவு ஆகும். | இதன் கால அளவு கி.மு.1500 முதல் கி.மு.600 வரை ஆகும். |
| 3. | இங்கு வாழ்ந்த மக்களினம், அவர்கள் பேசிய மொழி பற்றி இதுவரை தெளிவான கருத்து இல்லை. | மத்திய ஆசியாவிலிருந்து குடி பெயர்ந்து கைபர் கணவாய் வழியே வந்த ஆரியர்களே இந் நாகரிகத்தின் மக்களினம். |
| 4. | இது நகர நாகரிகத்தின் இயல்பைக்கொண்டது. மிகச் சிறந்த நகர வடிவமைப்பு, கட்டுமானம், வடிகால் வசதிகளுடன் இருந்தது. | கிராம நாகரிகத்தின் இயல்பைக் கொண்டது. |
| 5. | இம்மக்கள் இரும்பைப் பற்றி அறிந்திருக் கவில்லை. தாமிரம், வெண்கலம் உபயோகத்தில் இருந்தது | இரும்பாலான கோடாரி, கொழுமுனை கொண்ட கலப்பை ஆகியவற்றை பயன்படுத்தினர். |
| 6. | குதிரையைப் பற்றி இவர்கள் அறிந்திருக்க வில்லை. | இவர்களுக்கு குதிரை ஒரு பழக்கப்பட்ட விலங்காக இருந்தது. |

☆ ☆ ☆



www.surabooks.com

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





# அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

**1. ஆரியர்கள் முதலில் ____________ பகுதியில் குடியமர்ந்தனர்.**

அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி
இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு

**2. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ____________ லிருந்து எடுக்கப்பட்டது.**

அ) பிராமணா ஆ) ஆரண்யகா
இ) வேதம் ஈ) உபநிடதம்

**3. ரிக் வேதகால ஆரியர்களின் முக்கிய சொத்து ____________ ஆகும்.**

அ) நிலம் ஆ) தங்க நாணயங்கள்
இ) கால்நடைகள் ஈ) உணவு தானியங்கள்

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக.** (1 × 1 = 1)

**1. கூற்று 1 : தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு ஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன் மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.**

**காரணம் 2 : இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.**

அ) கூற்று 1 தவறானது ஆ) கூற்று 2 தவறானது
இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை
ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. வேதகாலத்தில் மக்களிடமிருந்து __________ என்ற வரி வசூலிக்கப்பட்டது.
2. __________ முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.
3. மூத்தோர்களைக் கொண்ட மன்றம் __________ எனப்பட்டது.

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.
2. படைத்தளபதி 'கிராமணி' என அழைக்கப்பட்டார்.

**V. பொருத்துக.** (3 × 1 = 3)

| | | |
|---|---|---|
| அ) கீழடி | - 1. | கிராமத் தலைவர் |
| ஆ) சுருதிகள் | - 2. | பகடை |
| இ) கிராமணி | - 3. | பிராமணங்கள் |

அ) 3 1 2 ஆ) 1 2 3
இ) 2 3 1 ஈ) 1 3 2

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுக.** (4 × 2 = 8)

1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. கற்திட்டைகள் என்பது என்ன?
3. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?
4. ரிக்வேதகால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள் யாவை?

**VII. விரிவான விடை தருக.** (1 × 5 = 5)

1. வேதகால பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## விடைகள்

I. 1. அ) பஞ்சாப்
2. ஈ) உபநிடதம்
3. இ) கால்நடைகள்

II. 1. இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

III. 1. பாலி
2. குருகுலக்கல்வி
3. சபா

IV. 1. சரி
2. தவறு

V. அ) 3 1 2

VI. 1. பார்க்க பக்கம் 84, வினா எண் VI - 1.
2. பார்க்க பக்கம் 84, வினா எண் VI - 4.
3. பார்க்க பக்கம் 84, வினா எண் VI - 5.
4. பார்க்க பக்கம் 89, வினா எண் VI - 3.

VII. 1. பார்க்க பக்கம் 85, வினா எண் VII - 2.

☆ ☆ ☆



www.surabooks.com

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000